# லலித் கொலை விசாரணையை திசைதிருப்ப முயற்சி?

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி கொலை தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புலனாய்வு விசாரணை யைத் திசைதிருப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி

(4ம் பக்கம் பார்க்க)

02 -5- 1993

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 18 இதழ் 75

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 1 — 05 — 1993

## இளைஞரின் சடலம் சர்ச்சையை கிளப்பியுள்ளது

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலி கொலையுண்ட தினத்தன்று இளைஞர் ஒருவரின் சடலம் கொலை நடந்த இடத்தி லிருந்து சிறிது தூரத்தில் கண்டெடுக்கப்பட்டது தொடர்பாக தற்போது பெரும் சர்ச்சை எழுந்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

## மேதினத்தை லலித் கொலை முக்கியமாக்கிவிட்டது

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய முன்ன ணித் தலைவர் லலித் அத்து லத்முதலியின் கொலையும் அத னைத் தொடர்ந்த வன்முறை யும் இன்றைய மேதினத்தை முக்கியமானதாகத்தாக்கிவிட்ட தாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சிகள் கூட்டாக

(4-ம் பக்கம் பார்க்க)

★ இன்று மே தினம்

# தமிழ்ப்பகுதிகளில் மாபெரும் எழுச்சிப் பேரணி நடைபெறும்

## பல்கலைக்கழகவளவில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளர் தினமாகிய மேதினம் இன்று தமிழீழமெங்கும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது. யாழ். குடாநாட்டிலும் ஏனைய தமிழீழப் பகுதிகளிலும் மாபெரும் மேதின ஊர்வலங்களும் கூட்டங்களும் இன்று நடைபெறவுள்ளன.

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மேதினத்தை வெரட்டிய எழுச்சியூட்டும் வாசகங்களும், பதாகைகளும், பிரசுரங்களும் காணப்படுகின்றன.

சகல வாகனங்களிலும் பதா கைகள் கட்டப்பட்டுள்ளன. திரும்பிப் பார்க்கும் இடமெங்கும் மஞ்சள் சிவப்பு நிறக்கொடி களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

வெகுஜன அமைப்புகள் சார்பில் மேதினத்திற்கான அறைகூவல்கள் ஒலிபெருக்கி மூலம் விடுக்கப்படுகின்றன.

இன்று நடைபெறும்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நடைபெறும் மேதின கூட்டங்கள்

(கொழும்பு)

அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்கள் என்பன கொழும்பில் ஐந்து மேதின ஊர்வலங்களை ஏற்பாடு செய் துள்ளன. பல மேதினக் கூட் டங்களும் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் இன்று

(4-ம் பக்கம் பார்க்க)

## விடுதலை போராட்டத்தில் அனைவரும் ஒன்றிணைவோம்

(யாழ்ப்பாணம்)

காலம் காலமாக தொழி லாளர்கள் ஒரு நாட்டின் மாபெரும் சக்தியாக விளங்கி யிருக்கின்றார்கள். ஆனால் அவர்களது உழைப்பு சுரண் டப்பட்டு ஆட்சியாளர்களா லும் முதலாளி வர்க்கத்தா லும் அடக்கியாளப்பட்டிருக்கி

(4ம் பக்கம் பார்க்க)

## 2 லட்சம் ரூபா சன்மானம்

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலி கொலை செய்யப்பட்ட பகுதி யில் காணப்பட்ட சடலத்தை அடையாளம் காட்டுபவர் களுக்கு 2 லட்சம் ரூபா சன் மானம் வழங்கப்படுமென்று அரசு நேற்று அறிவித்தது.

மேற்படி கொலை பற்றிய

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக முதலமைச்சருக்கு சிறப்பு பாதுகாப்பு

(சென்னை

இலங்கை போராளிகளின் அச்சுறுத்தலை எதிர்நோக்கி யுள்ள முதலமைச்சர், முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கும். சிறப்பு பாதுகாப்பு அளிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்புக்கு வெடிமருந்து வாகனங்கள் வரவில்லை

### பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

அரசு கட்டுப்பாட்டிலுள்ள ஒப்சேவர் பத்திரிகை கொழும் புக்கு வெளியே வெடிமருந்து களை ஏற்றிவந்த இரண்டு

(2-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ், இராணுவத்தினர் கொழும்பு நகரில் குவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் இன்று நடை பெறும் மேதினக் கொண்டாட் டங்களின்போது வன்செயல் கள் இடம்பெறலாம் என்பத னால் இராணுவத்தினரும், பொலிசாரும் பெருமளவில் நகரில் குவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை தொடக்கம் கொழும்பு நகரின் பல இடங் களிலும் பொலிசாரும். இரா ணுவத்தினரும் உஷார் நிலை யில் வைக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரி விக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

புலிகளின் எதிர் தாக்குதலினால்

## புளொட்குழுவும், ராணுவமும் இழப்புடன் தப்பியோட்டம்

(வவுனியா

வவுனியாவில் நேற்று முன் தினம் விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்திய புளொட் குழுவினரும் இராணுவத்தின ரும் புலிகளின் பதில் தாக்குத லினால் இழப்புகளுடன் தப்பி யோடினார்கள்.

வவுனியா சாளம்பைக்குளம் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா ராணு வத்தினரும் புளொட் குழுவி னரும் மறைந்திருந்துவிடுத லைப்புலிகள் மீது தாக்குதலை நடத்தினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

★ தமிழகத்தில் பரபரப்பு

## காரில் வந்த போராளிகள் கைதிகளை மீட்டுச் சென்றனர்

(சென்னை)

சென்னைக்கு அருகே உள்ள மதுராந்தகத்தில் தடா சட் டத்தின்கீழ் கைதுசெய்யப் பட்டிருந்த மூன்று இலங்கைப் போராளிகளை விடுதலைபுலிகள் மீட்டுகொண்டு தப்பிசென்று விட்டதாகவும் இதில் பொலிஸ் காரர் ஒருவர் போராளிகளின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு பலியானதுடன் இன்னொரு பொலிஸ்காரர் படுகாய மடைந்தார் எனவும் சென்னை பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை சென்னையில் இருந்து 70 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மதுராந்தகத் தில் நடைபெற்றுள்ளது.

(3-ம் பக்கம் பார்க்க)

## விசாரணைக்கு நியமனம்

(சென்னை)

மதுராந்தகம் அருகே நேற்று முன்தினம் நடைபெற்ற கைதிகள் கடத்தல் சம்பவத்தை விசாரணை செய்வதற்காக, உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை தலைவராகக் கொண்ட விசாரணைக்குழு ஒன்று தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

மேற்படி கடத்தலின் பின்

(3-ம் பக்கம் பார்க்க)

## 'ஐலண்ட்' பத்திரிகைக்கு தொலைபேசி அச்சுறுத்தல்

(கொழும்பு

ஐலண்ட், திவயின பத்திரிகைகளை வெளியிடும் உபாலி பத்திரிகை நிறுவனத்துக்கு நேற்று அச்சுறுத் தல்கள் விடுக்கப்பட்டன.

இன்று மேதினம் மேற்படி பத்திரிகை நிறுவனம் அடித்து நொருக்கப்படுமென தமக்கு பல அனாமதேய தொலைபேசி அச்சுறுத்தல்கள் வந்ததாக இந்த ஸ்தாபனத்தின் தலைவர் டாக்டர் சீவலி ரத்வத்த தெரிவித் துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### அறிவுக்களஞ்சியம்

அறிவுக் களஞ்சியம் 11வது இதழ் 3-5-93 திங்கட்கிழமை வெளிவருகிறது. (எ-3094)

### பயிற்சி வினாத்தாள் (ஆண்டு 4, 5)

சிறந்த பெறுபேற்றை வருடாவருடம் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை வினாத்தாளும் ஆண்டு 4 பரீட்சை வினாத்தாளும் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 02-05-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-58)

### தேவை

5KVஇற்கும் 10KVஇற்கும் இடையே வலு உடையதும் டீசலில் இயங்கக்கூடியதுமான ஜெனரேற்றர் தேவை. தொடர்பு: நளினி கிறைண்டிங் மில் 730 கே. கே. எஸ். றோட் யாழ்ப்பாணம். (சி-61)

மூக்குக் கண்ணாடி பொருத்துவதில் அனுபவமுள்ளவர்கள் தேவை. (Fitter) இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சுய விபரங்களுடன் 5-5-93 க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C-69) C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (இ-69)

சகல விதமான இனிப்புப் பண்டங்கள், 1. பலகாரவகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள சுவீற்ஸ் மேக்கர் தேவை. 2 அனுபவமுள்ள கைவேலையாள் தேவை. 3. அப்பம் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர் தேவை. சம்பளம் நேரில் பேசலாம். நம்: 324, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், ரவர் ரேசப்பி பார். (எ-3091)

### ராஜா அச்சகம்

அச்சுவேலைகளும் விசேடமாக லேபல்களும் மிகக்குறைந்த செலவில் மிகவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். ராஜா அச்சகம் ஐயனார் கோவிலடி புதுறோட். கொக்குவில் மேற்கு. (சி-55)

### O/L கணிதம்

Distinction பெறுபேறடைய (ஆண்டுகள் 9, 10 உட்பட) ஆரம்பத்திலிருந்து 30 வருட அனுபவமுள்ள B. Sc (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (இ-68)

### சோதிட விஞ்ஞானம்

கைரேகை சாஸ்திரம், விவாகப் பொருத்தம், ஜாதகங்களின் கணிப்புகளுக்கும் நேரில் சந்திக்கலாம். சத்யா (இடிகுண்டுகைருகாமை) கட்டுடை. புத்தாண்டின் இராசிப் பலன்களும், ரேகை சாஸ்திரமும் ரூ 8/50 விற்பனையாகின்றது எனா ரேடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி. (இ-56)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர் சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-7)

# பயணிகள் பஸ் மீது ஹெலி தாக்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முறிப்புப் பகுதியில் பயணிகள் பஸ் மீது, ஹெலிகொப்டர் ஒன்று 50 கலிபர் தாக்குதலை சரமாரியாக நடத்தியது.

கடந்த புதன்கிழமை காலை 9-30 மணியளவில் நடைபெற்ற மேற்படி தாக்குதலில், அதிர்ஷ்டவசமாகப் பயணிகள் எவருக்கும் உயிரிழப்பு ஏற்படவில்லை.

இதேவேளையில், அன்றைய தினம் முற்பகல் 11-30 மணியளவில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் தண்ணீரூற்று, முள்ளியவளை, முறிப்பு ஆகிய பகுதிகளைப் பலதடவை வட்டமிட்டுச் சென்றன. தாக்குதல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. (க-இ)

# உற்பத்தி எழுச்சிவார போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட உற்பத்தி எழுச்சி வாரப் போட்டியில் இறுதிக் கட்டப்போட்டிகள் கடந்த மாதம் 27ம் திகதி ஊரெழு அம்மன் கோவிலடியில் நடைபெற்றன.

இப்போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்:

தோட்டம் கொத்துதல்: (1 சினிதுரைராஜா, சங்குவேலி. (2) பொன்னுத்துரை சுமாரன், சண்டிலிப்பாய். (3) குணமணி தர்மகுலசிங்கம், இமையாணன் கிழக்கு.

துலைப்பட்டை மூலம் நீர் இறைத்தல்: ஆண்கள்: (1) தங்கவேலு தவச்செல்வம், பொன்னன் தவநேசன், இமையாணன் கிழக்கு. (2) வேலன் மதிசீலன், நாகமுத்து தட்சணாமூர்த்தி, ஏழாலை. (3) கந்தன் கவராசா, துரையன் அழகேசன், இமையாணன்.

பெண்கள்: (1 குமாரசாமி சுமதி குமாரசாமி வசந்தி, வரணி. (2) கந்தசாமி மஞ்சுளேஸ்வரி, கந்தசாமி தர்மரத்தினேஸ்வரி, வரணி. (3) வல்லி அருந்தவம், கந்தையா தேவகுமாரி, வரணி.

பனைமரம்ஏறுதல்:- (1) தில்லையம்பலம் அருமைத்துரை, புன்னாலைக்கட்டுவன். (2 கணேசு இளஞ்சிங்கம், அல்வாய் வடக்கு (3 நடராசா இரதீஸ்வரன், அரியாலை.

குட்டான் இழைத்தல்: (1) கந்தசாமி செல்வநாயகம், வரணி, (2) இரஞ்சிதராஜன் ரஞ்சனாதேவி, அல்வாய் வடக்கு (3) கந்தசாமி தர்மஞானேஸ்வரி, வரணி

கிடுகு பின்னுதல்: (1 வே. பாக்சாமி யாழ்ப்பாணம் (2) கட்டையன் பராசக்தி, வரணி, (3) ஆ. லீலாவதி, விக்னேஸ்வரா முகாம், சங்கானை.

உணவு தயாரித்தல்: (1) சந்திரா தேவநேசன், மானிப்பாய். 2) சாந்தினி திருநாவுக்கரசு, புத்தூர். (3) திருமதி சந்திரவதனி அம்மாள் பொன்னம்பலம், ஆவரங்கால்.

பதனீர் உற்பத்தி: (1) த யோகேந்திரம், பளை (2) பொ. மாணிக்கசிங்கம், அரியாலை, (3 முருகேசு, விமலராசா, சங்கானை.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று மே நாளன்று நடைபெறும் மாபெரும் பொதுக் கூட்ட மேடையில் வைத்து வழங்கப்படும்.

நாளை

# பொன் விழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் பொன்விழா மலர் வெளியீடு நாளை காலை 9 மணிக்கு நல்லை ஆதீனத்தில் வெளியிடப்படுகிறது.

இந்தப் பொன்விழா மலரில் நடராஜப்பெருமானினதும் அம்பிகையினதும் படங்களை தாங்கியவண்ணம் அட்டைப் படம் வெளிவந்துள்ளது. இம்மலரில் ஈழத்தினதும் தமிழகத்தினதும் பிரபல பேராசிரியர்கள், பண்டிதர்கள், வித்வான்கள் சமய அறிஞர்கள்பலர் 40 கட்டுரைகளை எழுதியுள்ளனர். சைவத்தைப் பற்றி பல கோணங்களிலும் மிக விரிவாக உசாத்துணை நூல்களின் ஆதாரங்களுடன் விஞ்ஞான முறையில் பல கட்டுரைகள் உள்ளன. சமய வாழ்க்கை, சமயக்கிரியைகள் மற்றும் சைவசமயத்தின் தொன்மைத் தன்மையை பற்றியும் காரைநகரின் பெருமை பற்றியும் ஈழத்துச்சிதம்பர தல வரலாறு குறித்தும் கட்டுரைகள் விபரிக்கின்றன.

இப்பொன்விழா மலர் உயர் கல்வி மாணவர்க்கும் சிறந்த நூலாக அமைகின்றது. (இ)

# பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளி தரம் IIIக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை, நாளை 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்திலும், கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகள், கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்திலும் பரீட்சைக்குத் தோற்றலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)


## கொழும்புக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்கள் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது

ஆனால் ராணுவ அதிகாரிகள் இந்தச் செய்தியை மறுத்துள்ளனர்

இதேவேளை கொழும்பில் ராணுவத் தலைமையகத்தை தகர்ப்பதற்குபுலிகள் ஊடுருவி இருப்பதாகவும், இரண்டு வாகனங்களில் வெடிமருந்துகள் நிரப்பப்பட்டு அவை கொழும்புக்கு அனுப்பப்பட்டதாகவும் நேற்றுமுன்தினம் ஏஜென்சி செய்திகள் தெரிவித்திருந்ததும் தெரிந்ததே. (இ


# வெற்றுப்போத்தல் பரிசுக்குலுக்கல் போட்டி-93

முதலாவது சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர் விபரம்

## 1st Lottery Draw (30-04-93)

| PRIZE | NO | NAME | ADDRESS |
|---|---|---|---|
| 1 | 90 | பா. மதனி | சாவகச்சேரி வடக்கு |
| 2 | 264 | து. கமல் | 26, கடுக்கையடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். |
| 3 | 431 | ம. ரத்தினசிகாமணி | கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை |

## Consolation Prizes

| PRIZE | NO | NAME | ADDRESS |
|---|---|---|---|
| 1 | 813 | T. சதானந்தன் | அம்மன் கோவிலடி, கோண்டாவில் |
| 2 | 40 | பாமா | கல்வயல், சாவகச்சேரி |
| 3 | 441 | வனிதாமணி | அம்மன் கோவிலடி, வதிரி, கரவெட்டி |
| 4 | 316 | P. வடிவேல் | 136, K.K.S வீதி, சுன்னாகம் |
| 5 | 651 | J. R. சபாநாயகம் | 631, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் |
| 6 | 493 | கு. ரமணி | மினிவேரி, வல்வெட்டித்துறை |
| 7 | 401 | V. M. சுப்பிரமணியம் | கரவெட்டி கிழக்கு, கரவெட்டி |
| 8 | 305 | K. சுதன் | சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் |
| 9 | 412 | இ. வாகீசன் | துடுமராஜ் வீதி, நெல்லியடி, கரவெட்டி |
| 10 | 223 | K. கணேசதாசன் | 27/40, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். |

காலக்கிரமத்தில் பரிசில்கள் அனுப்பிவைக்கப்படும்

2-வது சீட்டிழுப்பு மே மாதம் 30-ம் திகதி நடைபெறும்

இன்றே போத்தல்களை ஒப்படைத்து இரண்டாவது சீட்டிழுப்புக்கான டிக்கட்டுகளை பெற்றுக்கொள்ளுங்கள்

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(எ-3099)

# தமிழ் ஈழ இலட்சியத்துடன் தொழிலாளர் கொண்டாடும் 'மேதினம்'

மே தினம் இன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. மேதினம் வியர்வை சிந்தி உழைக்கும் தொழிலாளியின் திருநாள் பாட்டாளி வர்க்கத்தின் பெருநாள். உலகெங்கும் உள்ள உழைக்கும் இனம் குதூகலத்துடன் கொண்டாடும் ஒரு முக்கிய நாள்.

தமிழ் இனம் மேதினத்தை கொண்டாடுவதன் அர்த்தம் என்ன? கூலி உயர்வுக்காகவா? பதவி உயர்வுக்காகவா? விலை எதிர்த்தா? வாழ்க்கை செலவு அதிகரிப்பை கண்டித்தா? இவையெல்லாம் சிறிலங்கா மக்களின் தேவைகளாக இருக்கலாம். ஆனால் இவை தமிழ் ஈழ மக்களின் தேவை அல்ல.

தமிழ் ஈழ மக்களின் தேவை இவற்றையெல்லாம் கடந்த தமிழ் ஈழம். தமிழ் ஈழத்து தொழிலாளர் ஆண்டுக்கு ஒரு முறை சிறிலங்கா அரசிடம் சலுகைகள், உரிமைகளை கேட்டுப் பெறுவதில் நம்பிக்கை இழந்து பலஆண்டுகள் கழிந்து போயின. இன்று தமிழ் ஈழத்தவர் மேதினத்தை கொண்டாடும்போது உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் காதுகளில் ஒலிக்கும் ஒரே குரல் இலட்சியம் 'தமிழ்ஈழம்'.

எட்டு மணி நேரமே உடல் உழைப்பு எட்டு மணிநேரம் ஓய்வு. எட்டு மணி நேரம் குடும்பத்துடன், நண்பருடன், சுற்றத்தாருடன் பொழுதுபோக்கு என்ற வகையில் கோரிக்கையை முன்வைத்து தொழிலாளர் போராட்டம் நடத்தினர் 1886ல், சிகாகோவில் நடந்த அத்தகைய ஒரு போராட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் பலர் ஆட்சியாளரின் ஆயுதப்படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். துப்பாக்கிகளுக்கு அஞ்சாத தொழிலாளர் தொடர்ந்து முன்னெடுத்த போராட்டத்தின் பயனாக எட்டுமணிநேர வேலை என்ற உரிமையை வென்றெடுத்தனர்.

**எஸ். பி. கே.**

1889ல் பாரிஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச சமதர்ம மாநாட்டில் மே முதல் நாளை தொழிலாளர் விடுமுறை நாளாக ஏற்றுக்கொள்வதென முடிவுசெய்யப்பட்டது: அன்று முதல், மே முதல் தேதி, உலக நாடுகளிலெல்லாம் உழைக்கும் மக்களின் விடுமுறை நாளாக இருந்து வருகிறது.

அக்காலத்தில் ரஸ்யாவில் ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சி நிலவியது. பயங்கர அடக்குமுறைக்கு நடுவிலும் அங்கே மேதினம் கொண்டாடப்பட்டது. பொலிஸ் படையின் தடியடிக்கும் இராணுவத்தின் துப்பாக்கிகளுக்கும் தொழிலாளர் இலக்காயினர்.

மே தினத்தைப் பயன்படுத்தி. புரட்சிக்கு வித்திட்டு ஜார்ஆட்சியை ஒழிக்க உழைத்தவர் லெனின். ஜார் ஆட்சி ஒழிக்கப்பட்டு, 1917ல் தொழிலாளரின் வெற்றி நாளான மே தினம் சுதந்திரமாகக் கொண்டாடப்பட்டது ரஷ்யாவில்.

இன்று தமிழ் ஈழமெங்கும் தொழிலாள வர்க்கம் தமிழ் ஈழம் என்ற ஒரே ஒரு இலட்சியத்தை முன்வைத்து மே தினத்தை கொண்டாடுகிறது.

இந்நாளில் தமிழ் மண்ணில் வாழும் எமது சிந்தனையெல்லாம் ஒன்றே ஒன்றுக தமிழ் ஈழமண் விடுதலையாக இருக்க வேண்டும் இதற்காக தம் உயிரைத் தியாகம் செய்துவிட்ட பல்லாயிரம் போராளிகளின் ஆன்மாக்கள் அமைதிபெற நாம் தரும் கைமாறு என்ன. தமிழ்ஈழம் தவிர வேறெதுவும் ஈடாகா.

தமிழ் இனம் இந்த மண்ணில் உரிமையுடைய மக்கள் இனமாக தன்னாட்சி பெற்று வாழவேண்டுமெனில் ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறை உடைக்கப்பட்டு தமிழ்ஈழ ஆட்சி உருவாகவேண்டும்.

## தமிழகத்தில் 132 முகாம்களில் 1,11,000 இலங்கை தமிழர்கள்

(சென்னை)

தமிழ் நாட்டில் தற்போது ஒரு லட்சத்து பதினோராயிரம் இலங்கை தமிழ் அகதிகள் 132 அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று தமிழக அரசு செய்திக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது

இதேவேளை 30,977 இலங்கைத்தமிழர்கள் காவல் நிலையங்களில் பெயர்களைப்பதிவு செய்துவிட்டு முகாம்களுக்கு வெளியேவசித்துவருகிறார்கள்.

கடந்த ஆண்டு இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக தமிழக அரசு 14 கோடியே 18 லட்சம் ரூபா வரையில் செலவு செய்துள்ளதாகவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## ★ விமான விபத்து
## உதைபந்தாட்ட அணியின் அனைவரும் பலி

(லண்டன்)

மத்திய அத்லாந்திக் சமுத்திரத்தில் ஏற்பட்ட விமான விபத்தில், சாம்பியாவின் தேசிய உதைபந்தாட்டக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் இறந்தனர்.

சாம்பியா தலைநகரில் இருந்து புறப்பட்ட இந்த விமானம், அத்லாந்திக் சமுத்திரத்தில் வீழ்ந்தது. அதில் பயணம் செய்த பயணிகள் எவரும் உயிர் தப்பவில்லை.

இந்த விமானத்தில் சென்ற உதைபந்தாட்டக் குழுவினர் பல போட்டிகளில் வெற்றி ஈட்டிய பின்னர் செனகலுக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

அடுத்த ஆண்டு அமெரிக்காவில் நடைபெறவுள்ள 'உலகக் கிண்ணப்' பந்தயங்களில் தகுதி பெறும் வாய்ப்பும் இவர்களுக்கு இருந்தது.

இந்த விமானத்தில் மொத்தம் எத்தனை பேர் பயணம் செய்தனர் என்பது பற்றிய விபரம் தெரியவில்லை. இதுவரை 30 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. (வே-கி)

## இராசி பலன்

01-05-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை 18)

தசமி மு இ. 9-05 வரை: மகம் பி. ப. 1.59 வரை: அமிர்தசித்தயோகம். இராகு காலம் காலை 8-57 முதல் 10-27 வரை. சுபநேரம் மாலை 3-57 முதல் 4-27 வரை.

மேடம்: தொழில் முரண்பாடு, அதிக வேலைப்பளு, மனச்சுமை.

இடபம்: குடும்ப உறவில் விரிசல், பணமுடை, அலைச்சல்.

மிதுனம்: காரியச் சிறப்பு, திருமணயோகம், கடித உறவு.

கடகம்: நினைவு தடுமாற்றம், கடும் யோசனை, தொழில் நஷ்டம்.

சிங்கம்: கருத்தொருமிப்பு, நண்பர் வருகை உல்லாசம்,

கன்னி:- தொழில் இலக்கு, அகால போஜனம். குடும்பப் பகை.

துலாம்:- மன மகிழ்ச்சி, புதிய நட்பு, கல்வியால் சிறப்பு.

விருச்சிகம்: உறவினர் பெருமை, தொழில் ஏற்றம், பயணம்.

தனுசு: புறக்கணிப்பு, பணியால் வெறுப்பு, மனச் சங்கடம்.

மகரம்: வாய்தர்க்கம், ஏமாற்ற உணர்வு, மனச் சுமை.

கும்பம்: நற்பணி, காரியம் கைகூடும், பெண் உதவி.

மீனம்: எதிர்பாராத சந்திப்பு, அதிக பிரயாசம், புத்திரர் பெருமை.

ஜோஸ்யர்

## தமிழகத்தில் பரபரப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி

இதுபற்றி பொலிஸார் மேலும் கூறுகையில், சென்னை மத்திய சிறையில் தடாக் கைதிகளாக இருந்த கிருபன், சந்திரன் ரவி, விக்டர் ஆகிய போராளிகளை பாளையம் கோட்டை சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு பொலிஸ் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றது.

காவலாக இந்த வானில் ஒரு சப்இன்ஸ்பெக்டரும், மூன்று பொலிஸ் காவலர்களும் உடன் சென்றனர். நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் சென்னையில் இருந்து புறப்பட்ட இந்த காவல்துறை வாகனம், இரவு பதினொரு மணியளவில் மதுராந்தகம் அருகே சாலையோரத்தில் உள்ள ஹோட்டல் முன்னால் நிறுத்தப்பட்டது.

காவலர்களும் கைதிகளும் இந்த ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வாகனத்தை நோக்கி திரும்பிக்கொண்டிருந்தபோது திடீரென எதிரிலிருந்தோ அவ்விடத்திற்கு வந்த ஒரு அம்பாசிடர் காரில் இருந்து குதித்த நான்கு போராளிகள் பொலிசாரை நோக்கி திடீரென்று 'ஏ கே 47' துப்பாக்கியால் சுட்டனர்.

இதனால் மோகன் என்ற பொலிஸ்காரர் இறந்தார். சக்கரவர்த்தி என்ற பொலிஸ்காரர் படுகாயமடைந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மூன்று தடா கைதிகளும் மீட்கவந்த போராளிகளுடன் அம்பாசிடர் காரில் தப்பிச் சென்றுவிட்டனர்.

பொலிஸார் இவர்களைத் திருப்பிச் சுட்டபோதும் அவர்களைத் தடுத்துப்பிடிக்கமுடியாமல்போய்விட்டது. எனினும் விக்டர் என்ற போராளி தப்பிச்செல்ல முடியாமல் போய்விட்டது.

போராளிகள் தப்பிச்சென்ற இந்தக்கார் நேற்று முன்தினம் மகாபலிபுரம்அருகே திருவிடம் என்ற இடத்திற்கு அண்மையில் போராளிகளால் பறிக்கப்பட்டது என்றும், வழியில் போய்க்கொண்டிருந்த இந்தக் காரை மறித்த போராளிகள் காரின் சாரதியிடமிருந்து பலவந்தமாக காரைக் கடத்திச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள்தான் காவலில் இருந்த கைதிகளை மீட்டுச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட கைதிகள் விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் முக்கியமானவர்கள் எனப் பொலிஸார் கூறியதாக இந்திய வானொலி அறிவித்தது. (சு-கி)

## 'மே' தினம் உழைப்பவர் மா தினம்

எலும்பொடு தசைகள் மோதி,
எழுந்திடும் நெருப்பி னூடு;
கிளம்பிடும் உழைப்பி னூற்றல்
கிட்டிடும் பேறு பெற்றும்;
புலம்பிடும் நிலையி லந்தப்
புனிதர்கள் வறுமை தன்னில்;
நிலம்பட வீழ்ந்து உள்ள,
நியதியைத் தோற்க டிப்போம்!

★

உதிரத்தை வேர்வை யாக்கி,
ஊரெலாம் பாய வைத்து.
உதிரத்தான் உழைத்து வாழும்,
அற்புத மாந்தர் தம்மின்,
சரிதத்தை இந்த நாளிற்,
சகலர்க்கும் எடுத்து ஓதும்,
பதிகத்தைப் பாடி வைத்தேன்!
பாட்டாளி வாழ்க!! வாழ்க!!!

— ஜெ. கி. ஜெயசீலன்

## நமக்கொரு நாட்டை நாங்கள் சமைப்போம்

காடுகள் களைந்து கனிகள் தந்தோம்
வீடுகள் அமைத்து வீதிகள் செய்தோம்
ஆலைகள் கண்டோம் ஆடைகள் நெய்தோம்
சாலையிற் குப்பை தலையிற் சுமந்தோம்
மலையைப் பிளந்தோம் அலையிற் தவழ்ந்தோம்
உலையில் இரும்பை உருக்கி வடித்தோம்
ஆயினும் விடிவு அடைந்திட வில்லை
மெய்யினை மூடக் கந்தைத் துணியும்
மொய்த்துக் குடிக்க மொந்தையிற் கூழும்
அல்லால் வேறு ஆஸ்திகள் இல்லோம்
மேதினித் தொழிலர் மேன்மைகள் பெற்ற
மேதினத் தன்றோர் உறுதி எடுப்போம்
எமக்கொரு குறையும் எய்திடா திருக்க
நமக்கொரு நாட்டை நாங்கள் சமைப்போம்.

நாயன்மார்கட்டு இ. குகதாசன்

## உலகீரே ஒன்று சேர்வீர்

இழைகள் பல ஒன்று ஞாக்கி தன்
இயல்புஉரம் பெறுவது போலே
மழைத்துளிகள் பலசேர்ந் துபெருகி
வரும்வெள்ளம் ஆவது போலே
உழைப்பாளி உரிமை யெல்லாம்
உண்மையிலே பெற்று மகிழ
உழைத்திடுவோம் மேதி னத்தில்
உலகீரே ஒன்று சேர்வீர்.

— வ. யோகானந்தசிவம்

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் "பொது நிர்வாகப் பட்டப்பின் கற்கை நெறிக்கான" தொடக்க நிகழ்ச்சி இன்று சனி காலை 9-00 மணிக்கு பொருளியல் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். இக்கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டோருக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

★

(தாவடி)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் பதினைந்து பிரிவுகளிலுமுள்ள சகல முதலுதவித் தொண்டர்களையும் அவர்களது வெள்ளைச் சீருடையில் இன்று முதலாம் திகதி காலை 7-30 மணிக்கு யாழ். கிளைத் தலைமை அலுவலகப் பணிமனையில் சமுகமளிக்கும்படி யாழ். கிளைத் தலைவர் அறிவித்துள்ளார். (168)

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடாத்திவரும் உற்பத்தி எழுச்சி வாரப் போட்டியில் சிறப்பு நிகழ்வாகிய மாட்டுவண்டிச் சவாரி போட்டி நீர்வேலி சவாரித் திடலில் கடந்த 28-ம் திகதி நடைபெற்றது.

வெற்றி பெற்றவர்களுக்குத் தங்கப்பதக்கம் உட்பட பல பெறுமதிமிக்க பரிசில்கள் மேதினம் நடைபெறும் பொதுக்கூட்ட மேடையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வெற்றியீட்டியோர் பெயர் விபரங்கள் வருமாறு: ஏ பிரிவு 1. சின்னராசா கருணா, சண்டிலிப்பாய் 2. இளையதம்பி அருணாசலம், அளவெட்டி 3. விநாயகமூர்த்தி அரவிந்தன் வட்டுக்கோட்டை

பி பிரிவு 1. சோமசுந்தரம் மகாலிங்கம் வட்டுக்கோட்டை 2. சுப்பிரமணியம் சுகிதன் கரவெட்டி 3. சின்னத்தம்பி பத்மநாதன் மட்டுவில் வடக்கு

சி பிரிவு சுந்தரயா செல்வரத்தினம் மானிப்பாய் 2. இளையதம்பி சின்னத்தம்பி அச்சுவேலி 2. சின்னத்தம்பி மகேந்திரன் அளவெட்டி

## வாதுவ, குமண வருகிறது

(யாழ்ப்பாணம்)

வாதுவ என்ற கப்பலில் மா ஏற்றும் வேலைகள் திருகோணமலைத் துறைமுகத்தில் நடைபெறுகின்றன.

மா ஏற்றப்பட்டு முடிந்ததும் வாதுவ கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது. (159)

0 0 0

(யாழ்ப்பாணம்)

குமண கப்பலில் பொருட்கள் ஏற்றும் வேலைகள் தற்போது கொழும்பில் நடைபெற்றுவருகின்றன.

குமண கப்பல் அடுத்த வாரம் இங்கு வந்து சேரவுள்ளது. (159)

அம்பாறை மாவட்டத்தில்

# அகதி முகாம்களிலுள்ள பலருக்கு ஆஸ்மாநோய்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ளவர்களில் பெரும்பாலானோர் ஆஸ்மா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள 12இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள 4, 224 குடும்பங்களைச் சேர்ந்த 17, 209 பேரில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஆஸ்மா நோயினால் பீடிக்கப் பட்டுள்ளனர்.

இந்த முகாம்களை ஆய்வு செய்துள்ள வைத்திய நிபுணர் ஒருவர் விடுத்த அறிக்கையிலே மேற்கண்ட தகவல்கள் வெளியாகியுள்ளன

அக்கரைப்பற்றுஎழுதுமட்டுவான் முகாமில் 376பேர் உள்ளனர். இவர்களில் 300 பேருக்கு மேற்பட்டோருக்கு இந்நோய் காணப்படுகிறது. இவர்களுக்கு மூங்கில் குழாய் கம்புகளில் குடிசைகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. இம்மூங்கில் குழாய்களை பூச்சிகளும், வண்டுகளும் அரிப்பதனால் இரவில் அவர்கள் உறங்கு போது அவர்களது முகத்தில் இந்த தூசுகள் விழுகின்றன. சுவாசிக்கும்போது உட்செல்லும் தூசிகளே இந்நோய்க்கான காரணமென தெரிவிக்கப்படுகிறது. (வி)

# எதிர்வரும் தேர்தல்கள் ஒரு கருத்துக் கணிப்பீடே!

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்கள் ஜனாதிபதி பற்றியும் அவர் ஆட்சி பற்றியும் ஒரு சிறிய மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இதில் ஏதும் விபரீதம் நடந்தால் அதை சாட்டி அரசு இந்த தேர்தல்களை நிறுத்தி விடக்கூடும் என்று எதிர்க்கட்சிகள் அஞ்சுகின்றன. (இ)

தமிழக அரசும்

# அமைச்சரவையும் உடன் பதவி விலகவேண்டும்

## வாழப்பாடி, கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

தமிழக அரசும், அதன் அமைச்சரவையும் உடனடியாக பதவி விலகவேண்டுமென தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியும், இந்திரா காங்கிரஸ் தமிழக தலைவர் திரு. வாழைப்பாடி இராமமூர்த்தியும் கோரியுள்ளார்கள்.

தமிழக அரசு 176 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அளித்த அங்கீகாரத்தை உயர் நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது.

அரசு தனது கடமைகளை சரிவரச் செய்யத் தவறியதுடன், அதிகாரத் துஷ்பிரயோகத்தை பாவித்துள்ளது என்று மேற்படி வழக்கை விசாரணை செய்த நீதிபதிக் குழு தமிழக அரசை கண்டனம் செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு தனது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து வருகிறது என்ற குற்றச்சாட்டுகள் இதன்மூலம் தெட்டத்தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது.

ஆகவே தமிழ்நாடு அரசும், அதன் அமைச்சரவையும் உடனடியாக பதவி விலகவேண்டுமென தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியும், இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தியும் கோரியுள்ளார்கள். (வி)

## இன்று திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மே தினத்தை முன்னிட்டு மக்களின் நலன் கருதி துவிச்சக்கரவண்டி திருத்தும் கடைகளும் டயர் ஒட்டும் கடைகளும் இன்றுதிறந்திருக்க ஏற்பாடாகி உள்ளது.

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டம் கந்தளாயில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 10-ம் திகதி ராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விழுப்புண் அடைந்திருந்த லெப். அன்ரன் அல்லது மாமூலன் (ஜோர்ஜ் அன்ரன் ரமேஸ் காந்திநகர் திருமலை) என்ற போராளி நேற்று வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். -ரி

## சந்தைகள் இயங்காது

(திருநெல்வேலி)

இன்று மே தினத்தை முன்னிட்டுக விவசாயிகள். திருநெல்வேலி சந்தைகள் நடைபெறமாட்டாது என வர்த்தகர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இன்று நடைபெறும் மே தின ஊர்வலத்தையொட்டியே இவ்வர்த்தக ஸ்தாபனங்கள், மக்கள் சந்தைகள் அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டிருக்கும் இவ் ஊழியர்கள் இன்றைய ஊர்வலத்தில் கலந்து கொள்ள உள்ளனர். (157)

### 'ஐலண்ட்'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது ஸ்தாபனத்துக்கும் அதில் கடமைபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு அவர் பொலிசாருக்கு எழுத்து மூலம் தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்த பத்திரிகை நிறுவனம் சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கிற்கு அருகில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-ரி)

### புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்திடீர் தாக்குதலை அடுத்து விடுதலைப்புலிகளும் பதில் தாக்குதலை நடத்தினர், இருபகுதியினருக்கும் இடையில் சிலமணி நேரம் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

நேற்று முன் தினம் காலை 11 30 மணியளவில் இடம்பெற்ற இந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய எதிர்த்தாக்குதலில் சிறிலங்கா இராணுவத்தினரும் புளொட் குழுவினரும் இழப்புக்களுடன் பின் வாங்கி தமது காவலரண்களுக்கு ஓடிவிட்டனர்.

இம்மோதலில் புலித்தேவன் (சின்னையா தெய்வேந்திர கோபாலய்) என்ற போராளியே வீரச்சாவு அடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ரி)

## ஆயிரம் கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு, ஆயிரம் சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அனுமதி வழங்கியுள்ளார்.

தூக்குத்தண்டனை வழங்கப்பட்ட கைதிகளுக்கு இதன் மூலம் ஆயுள்தண்டனை கிடைக்குமென்று, நீதி அமைச்சு அறிவித்துள்ளது. (வி)

## விசைப்படகுகள் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

கடற்கரும்புலிகளான கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோர் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட கடற்புலிகளின் விசைப்படகுகள் வெள்ளோட்டம் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது.

கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோர் நினைவாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள கடல் விளையாட்டுப் போட்டிகளின் போதே விசைப்படகுகளின் வெள்ளோட்டம் இடம்பெறுமென்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கரும்புலியின் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும். (ரி)

### இன்றுமேதினம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேதின ஊர்வலம் யாழ் குடாநாட்டின் பல பகுதிகள் ஊடாகவும் செல்லவுள்ளது. இன்று நடைபெறும் ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான ஊர்திகள் பல்வேறு பகுதிகளிலுமிருந்து எடுத்துவரப்படவுள்ளன.

இவ ஊர்திகள் எழுச்சியூட்டும் கருத்துக்களை சித்தரிப்பவையாக அமைக்கப்பட்டுள்ளன. மேதின எழுச்சி ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் பொதுமக்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகளை பல தொழிலாளர் அமைப்புகள் மேற்கொண்டுள்ளன.

மேதினஎழுச்சிஊர்வலத்தை அடுத்து யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்களும் தொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் உரைநிகழ்த்துவார்கள்.

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு காலி முகத்திடலில் நடைபெறும். ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இக்கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.

ஊர்வலம் சுகததாஸா உள்ளக விளையாட்டரங்கிலிருந்து ஆரம்பமாகும் திரு. ஒஸி அபேய சேகரா தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஐ. தே. க. ஊர்வலத்துடன் இணைந்துகொள்ளும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான ஏழு கட்சிகள் கூட்டாக மேதினக் கூட்டத்தை நடாத்தும். இந்தக் கூட்டணியின் ஊர்வலம் கிருலப்பனையில் ஆரம்பமாகும். கூட்டம் கொழும்பு கம்பஸ் பூங்காவில் நடைபெறும்: ஸ்ரீ. ல. சு. கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை தாங்குவார்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, லங்காசமசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி (வை. பி. பிரிவு), தேசிய மக்கள் விடுதலைக் கட்சி என்பன இதில் கலந்துகொள்ளவுள்ளன.

நவசமசமாஜக் கட்சி, இலங்கை முற்போக்கு முன்னணி உட்பட 12 ஸ்தாபனங்களைக் கொண்ட மக்கள் விடுதலை ஸ்தாபனத்தின் மேதினக் கூட்டம் கொழும்பு கொம்பனித்தெரு டிமெல் மைதானத்தில் நடைபெறும். இதற்கு திரு விக்கிரமாகுருணரட்ன தலைமை தாங்குவார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்அதன் மே தினக் கூட்டத்தை தலவாக்கொல்லையில் நடத்தவுள்ளது. இக்கூட்டத்திற்கு அமைச்சர் எஸ். தொண்டமான் தலைமை தாங்குவார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மே தினக் கூட்டம் குருநாகலில் நடைபெறும் (இ)

### மேதினத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் ஆதரவாளர்களை கடந்த வாரம் கொலையுண்ட லலித் அத்துலத் முதலிக்கு துக்கம் தெரிவிக்கும் வகையில் வெள்ளைக் கொடிகளை ஏந்திக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

கடந்த புதன்கிழமை நடந்த இறுதிச்சடங்கில் சுமார் இரண்டரை லட்சம் மக்கள் வரை கலந்து கொண்டனர். அரசுக்கு எதிரான உணர்ச்சிகளை இது வெளிப்படுத்தியது.

அப்போது நடந்த வன்முறை இன்று நடைபெறமாட்டாது என பாதுகாப்பு படைகள் நம்புவதாக தெரிவிக்கப் படுகிறது. (இ)

### லலித்கொலை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் பொதுச் செயலர் ஜி. எம். பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதன் ஒரு கட்டமாக கட்சியின் முன்னணித் தலைவர்களுக்கு எதிராக பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### இளைஞர் சடலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

சம்பந்தப்பட்ட இளைஞர் ஏற்கனவே கொலை செய்யப்பட்டு அந்த இடத்தில் கொண்டுவந்து போடப்பட்டாரா என்ற சந்தேகம் பரவலாக எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொண்டு வரும் இந பொலிஸ் கோஷ்டிகள் இந்த சந்தேகம் தொடர்பாக தற்போது தீவிர கவனம் செலுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (இ)

### 2 லட்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முழுவிபரங்களையும் தருபவர்களுக்கு 50 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென்று அரசு முன்னர் அறிவித்ததும் குறிப்பிடத்தக்கது. (வி)

### பொலிஸ் இராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு நகருக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களிலிருந்து இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பொலிசார் அழைத்து வரப்பட்டு நகர பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரில் எதிர்க்கட்சிகள் நடத்தும் மேதினக் கூட்டங்களில் பிரேமதாசா அரசுக்கு எதிரான கருத்துக்களே பிரதிபலிக்கும் என்றும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

### தமிழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு வகைசெய்யும் மசோதா ஒன்றை தமிழ்நாடு சட்டப் பேரவை நிறைவேற்றியுள்ளதென்று தெரிவிக்கப்படுகிறது.

எஸ். எஸ். எஸ். என்று அழைக்கப்படும் இந்தசிறப்புப் படைக்கு சட்டபூர்வ அந்தஸ்தினை மசோதா அளிக்கின்றது என்றும் கூறப்படுகிறது. (சு)

### விசாரணைக்குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னணியில் பெரும்சதி இருப்பதாகக் கூறிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கைதிகளுக்கு பாதுகாப்பளித்த பொலிசாரும், பொலிஸ் அதிகாரிகளும் சேவைநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸ் மேல் அதிகாரிகளிடமும் விளக்கம் கோரப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இதே நேரம் மேற்படி சம்பவத்தின் முழுவிசாரணையும் முற்றுப் பெறமுன் இக்கட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு சம்பந்தந்தம் உண்டு என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது என்றும் முதலமைச்சர் மேலும் கூறினார். (வி)

### விடுதலைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருர்கள். அடிமைப்படுத்தப் பட்டிருக்கிருர்கள்..

இவ்வாறு தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படாமை, ஆண், பெண் கூலியில் வேற்றுமை, சமநிலை பேணப்படாமை இன்றைய போராட்ட சூழ்நிலையில் மிகப்பெரிய கொடுமையாகும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் தேசிய இனங்களின் விடுதலை மட்டுமதான் தொழிலாளர்களின் உண்மையான பிரச்னைகளை தீர்த்துவைக்க முடியும்.

இன்று தமிழீழத்தில் ஸ்ரீ லங்கா பேரினவாத அரசு பல்வேறு அடக்குமுறைகளையும், இராணுவ அட்டூழியங்களையும், கொடுமைகளையும் புரிந்துகொண்டிருக்கின்றது. இந்நிலையில் எமது தொழிலாளர்களின் உரிமைகளையும் வென்றெடுக்க வேண்டுமானல் நாம் அனைவரும் எமது தேசிய விடுதலை போராட்டத்தில் ஒன்றிணையவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (159-ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தொடர்பாக, யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number [B/10336/B